செய்தி வெளியீடு எண்:04 நாள்:03.01.2008

## செய்தி வெளியீடு

## நியாயவிலைக் கடைகளில் மின்னணு பட்டியல் இயந்திரம் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் வாங்கும் பொது மக்களின் நலன் கருதி அரசு நியாயவிலைக் கடைகளில் மின்னணு இயந்திரம் மூலம் பட்டியல் வழங்க முடிவெடுத்துள்ளது. 03.01.2008 மாலை 4.30 மணியளவில் சென்னை (தெற்கு) மாவட்டத்தின் கீழ் இயங்கும் சேப்பாக்கம் மண்டலத்தில் லட்சுமிபுரம் ரோடு மற்றும் சிங்கராச்சாரி தெருவில் உள்ள நியாயவிலைக் கடையில் மின்னணு இயந்திரம் மூலம் விற்பனை செய்யும் முறையை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. படிப்படியாக அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் மின்னணு இயந்திரங்கள் வழங்கப்படும்.

இதன் மூலம் பொது மக்கள், பட்டியல் பெற நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய அவசியம் இனிமேல் எழாது. கடை விற்பனையாளர் குடும்ப அட்டை எண், வாங்கும் பொருட்கள் மற்றும் அளவு ஆகியவற்றை இயந்திரத்தில் பதிவு செய்தாலே பட்டியல் உடனே அச்சாகி விடும். எனவே பொது மக்களுக்கு நேரம் மிச்சமாவதோடு விற்பனையாளரும் குறைந்த நேரத்தில் பலருக்கு பொருட்கள் வழங்க முடியும். இதனால் விற்பனையாளர் பொருட்களின் வரத்து, பொருட்கள் விற்பனை மற்றும் பொருட்கள் வாங்கியவரின் விவரங்கள், விற்பனை செய்த பொருட்களின் அளவு போன்ற விவரங்களை தினசரி பதிவேடுகளில் பதிவு செய்யும் வேலைப் பளுவும் இதன் மூலம் குறைக்கப்படுகிறது. இந்த விவரங்கள் அனைத்தும் ஆன்லைன் மூலமாக சர்வரில் சேமிக்கப்படுவதால் எந்த நேரத்திலும் விவரங்களை தெரிந்து கொள்ள முடியும். எனவே இந்த திட்டம் அரசின் பொது விநியோகத் திட்டத்தில் இன்னுமொரு மைல் கல்லாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

*********

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.